# 4 பொருளாதார முறைகளும் பொருளாதாரத் தொடர்புகளும்

## 4.1 அடிப்படை பொருளாதார பிரச்சினைகளை இனங்காணுதலும் பொருளாதார செயற்பாடுகளும்

### 4.1.1 மனித தேவைகளையும் விருப்பங்களையும் இனங்காணுதல்

ஒரு சமூகத்தில் வாழும் மக்கள் வாழ்க்கையில் பல் வேறு பொருட்களைப் பயன்படுத்துகின்றனர். உணவு, பானங்கள், ஆடையணிகள், வீடு, போக்குவரத்துச் சாதனங்கள், மருந்து வகைகள் என்பன அவற்றுள் சிலவாகும்.

மனிதனின் வாழ்க்கைக்கு கட்டாயமாகத் தேவைப்படும் பொருட்கள் அத்தியாவசித் தேவைகள் எனப்படும். உணவு, உறையுள், உடை அடிப்படைத் தேவைகளாகக் கொள்ளப்படுகின்றன. இவை வாழ்வதற்கு அவசியம் தேவைப்படுவனவாகும்.

விருப்பங்கள் என்பது விருப்பங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக உபயோகிக்கும் பல்வேறு முறைகளாகும். விருப்பங்கள் அளவிலடங்காது, அவை நாளுக்கு நாள் அதிகரிக்கின்றன.

மனித தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்ள பண்டங்களும் சேவைகளும் பயன்படுத்தப்படுகின்றன. பண்டங்கள்,சேவைகளை உற்பத்தி செய்ய வளங்கள் தேவை. வளங்கள் அருமையானவை. அவை மாற்றுப் பயன்பாடு கொண்டவை. எனவே எல்லாப் பொருட்களையும் சேவைகளையும் அருமையான வளத்திலிருந்து உற்பத்தி செய்ய முடியாத நிலையில் தெரிவு என்பது இடம்பெறுகின்றது.

**செயற்பாடு 4.1**

பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| தேவைகள் | விருப்பங்கள் |
|---|---|
| 1. உணவுப்பானங்கள் | உ+ம் சோறு பாண் |
| 2. உறையுள் | ............................... |
| 3. ஆடையணிகள் | ............................... |

மனிதன் கடந்து வந்த ஒவ்வொரு யுகத்திலும் சுற்றாடலில் இருந்த வளங்களைப் பயன்படுத்தி தன் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள முனைந்தான். வேடுவர் யுகம், இடையர் யுகம், யுகம், என்பன அவ்வாறு கடந்து வந்த சில யுகங்களாகும். காலம் செல்லச் செல்ல மனிதனின் ஆசைகள் விரிவடையத் தொடங்கின. இவ்வாசைகளை நிறைவேற்றிக் கொள்ள அரிதான வளங்களைப் பயன்படுத்தி பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்ய வேண்டியிருந்தது.

### 4.1.2 பொருட்கள் - சேவைகள் - உற்பத்தி

மனிதனின் தேவைகளையும் ஆசைகளையும் நிறைவேற்றிக்கொள்ள தேவையான பொருட்கள் சேவைகளில் சில இயற்கை சுற்றாடலில் இலவசமாகக் கிடைக்கின்றன. அவற்றிற்கு எவ்வித உற்பத்திச் செலவும் ஏற்படுவதில்லை. ஏனைய பல பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதற்காக செலவு செய்ய வேண்டியுள்ளது. காற்று, சூரியஒளி மழைநீர் என்பன முயற்சியேதுமின்றியே இலவசமாகக் கிடைப்பன. இவையும் விலையுள்ள (கிரயத்துடன் கூடிய) பொருட்களாகும் சந்தர்ப்பங்களுண்டு. சூரிய ஒளியைப் பயன்படுத்தி சூரியக் கலங்களூடாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் போதும் மழைநீரை குழாய்கள் மூலம் பெற்றுக்கொள்ளும்போதும் அவை பொருளாதாரப் பெறுமதியுள்ள விலையுடன்கூடிய பொருட்களாக மாறுகின்றன.

பொருளாதார பண்டங்கள் சமூகத்தில் உள்ள உற்பத்திச் செயலொழுங்குகள் ஊடாகவே உற்பத்தி செய்யப்படுகின்றன. ஒரு உற்பத்திச் செயலொழுங்கு நடைபெறுவதற்கு பொருட்கள், சேவைகளை உற்பத்தி செய்வதற்கான பொருளாதாரங்கள் தீர்மானத்தை எடுக்கும். பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்குப் பயன்படும் உற்பத்திக் காரணிகள் நான்காகும்.

1. நிலம்
2. உழைப்பு
3. மூலதனம்
4. முயற்சி

**நிலம்**

நிலம் என்பது புவிக்கோள வெளிக்கோளத்தை அடிப்படையாகக் கொண்ட இயற்கை வளங்களாகும். அதன்படி காணிவளங்கள், நீர்வளம், விலங்குவளம் ஆகிய அனைத்தும் இதிலடங்கும். நிலத்துக்கு வழங்கும் கொடுப்பனவு வாடகையாகும்.

**உழைப்பு**

பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்வதற்காக பயன்படுத்தப்படும் உடல்,உள, வலு உழைப்பு எனப்படும். உடல் உழைப்பை வழங்கும் தொழிலாளர், மேசன், விவசாயி, ஆகியோர் தம் ஊழியத்தை அர்ப்பணிப்பதுடன் வைத்தியர்கள், பொறியியலாளர், தொழில்நுட்பவியளாலர் தம் உளச்சக்தியை செலவிடுகின்றனர். உழைப்புக்கான கொடுப்பனவு ஊதியமாகும்.

**மூலதனம்**

மனித முயற்சியால் மேலும் உற்பத்தி செய்வதற்காக உற்பத்தி செய்யப்பட்ட வளம் மூவதனம் ஆகும். உதாரணமாக கருவிகள், உபகரணங்கள், இயந்திரங்கள், நீர்ப்பாசனத் திட்டம். தொழிற்சாலை, கட்டடங்கள், பணம், என்பவை அடங்கும். மூலதனத்துக்கான கொடுப்பனவு வட்டியாகும்.

**முயற்சி**

சிதறியுள்ள ஏனைய உற்பத்திக் காரணிகளை ஒன்றிணைத்து உற்பத்தித் தீர்மானங்களை எடுத்தல் உற்பத்தி ஒழுங்கமைப்புக்களை மேற்கொள்ளல், நெறிப்படுத்தல் என்பன இதில் அடங்கும். எதிர்கால நட்ட ஆபத்துக்களையும் தாங்கிக்கொண்டு முயற்சியாளன் இந்நடவடிக்கைளில் ஈடுபடுவதுடன் அதற்கான கொடுப்பனவு இலாபமாகும்.

### 4.1.3 அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகள்

அனைத்து மனித தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ளும் அளவுக்கு வளங்கள் பற்றாக்குறையாக இருப்பது எல்லா சமூகங்களும் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினையாகும். எனவே மனித தேவைகளுடன் ஒப்பிடும்போது காணப்படும் வளப்பற்றாக்குறையே அருமை எனப்படும். அருமை என்பதனால் எழும் அடிப்படைப் பிரச்சினைகள் மூன்றைக் குறிப்பிடலாம். அவையாவன:

1. எதனை, எந்தளவு உற்பத்தி செய்வது?
2. எவ்வாறு, யார் உற்பத்தி செய்வது?
3. யாருக்காக உற்பத்தி செய்வது?

1. எதனை எந்தளவு உற்பத்தி செய்வது:-
   நீங்கள் குடியிருக்கும் காணி 40 பேர்ச்சஸ் என வைத்துக்கொள்வோம். அதற்குள் நீங்கள் செய்யக்கூடியவை என்ன என்பதைப் பட்டியலிடுக.

   - அதில் நீங்கள் பயிர்களை நட உள்ளீர்கள் என்று வைத்துக்கொள்ளவும் அவ்வாறு நீங்கள் பயிரிட நினைப்பது என்ன?

   - அவ்வாறு பயிரிடக் கூடிய பல வகைகளில் நீங்கள் தெரிவு செய்யும் பயிரை எந்த அளவில் பயிரிடுவது? என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டியிருப்பின் நீங்கள் எதனை தெரிவு செய்வீர்கள்.

சமூகம் இத்தகைய தீர்மானங்களை எடுக்க வேண்டியிருக்கும்.

வளங்கள் அருமையாகவும் விருப்பங்கள் வரையறையற்றதாகவும் இருப்பதனால் எந்த ஒரு சமூகமும் தம் அனைத்து ஆசைகளையும் முழுமையாக நிறைவேற்றிக்கொள்ள முடியாது. எனவே சிலர் சில தேவைகளை மட்டும் ஒரு குறிப்பிட்ட அளவில் நிறைவேற்ற முயற்சிப்பர். இதில் முதன்முதல் ஏற்படும் பிரச்சினை எப்பொருளை எந்த அளவில் உற்பத்தி செய்வது என்பதைத் தீர்மானிப்பதாகும். அதன்படி உணவு, உடை, போன்ற நுகர்வுப் பொருட்களை உற்பத்தி செய்யலாம் அல்லது உபகரணம் கட்டடம் போன்ற மூலதனப் பொருட்களை உற்பத்தி செய்யலாம் அல்லது சில நுகர்வுப் பொருட்களையும் சில மூலதனப் பொருட்களையும் உற்பத்தி செய்யலாம். ஒவ்வொரு பொருளிலும் எந்த அளவை உற்பத்தி செய்வது என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டும். இவ்வினாக்களுக்கு விடை காண்பது பொருளாதாரம் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்திலேயே தங்கியுள்ளது.

உற்பத்தியில் ஊழியம், இயந்திரங்கள் என்பவற்றை உபயோகித்தல் பற்றியும், உற்பத்தியைத் தனிநபர்கள் அல்லாத நிறுவனங்களும் மேற்கொள்ள முடியும் என்பதையும் உரு 4.1 மூலம் விளங்கியிருப்பீர்கள். ஒரு பொருளாதாரத்தில் அது நடைபெறும் விதத்தைப் பார்ப்போம்.

2. எவ்வாறு யார் உற்பத்தி செய்வது? கீழுள்ள படங்களை அவதானியுங்கள்




உரு 4.1

எப்பொருளை எந்த அளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்பது தீர்மானிக்கப்பட்டபின் சமூகம் எதிர்நோக்கும் அடுத்த பிரச்சினை உற்பத்தி எவ்வாறு யாரால் நடைபெறுவது என்பதாகும். எவ்வாறு? என்ற பிரச்சினையால் விளங்கப்படுவது உற்பத்திக்காக உபயோகிக்கப்படும் நுட்பமுறைகளாகும். இங்கு உற்பத்திக்காக ஊழியத்தைப் பயன்படுத்துவதா அல்லது இயந்திரசாதனங்களுக்கான மூலதனத்தைப் பயன்படுத்துவதா அல்லது ஊழியத்தையும் மூலதனத்தையும் சேர்த்து பயன்படுத்துவதா என்பது தீர்மானிக்கப்படவேண்டும். அத்துடன் இவற்றை எந்தளவில் பயன்படுத்துவது என்பதும் தீர்மானிக்கப்படவேண்டும்.

பொருளாதார மொன்றில் காணப்படும் ஊழிய வளம், மூலதனவளம் என்பவற்றை உச்ச பயன்கிடைக்கும் வகையில் பொருத்தமான நுட்ப முறையைத் தீர்மானிக்கவேண்டும். யார் உற்பத்தி செய்வது என்பதன் மூலம் விளங்கவேண்டியது உற்பத்தி நடவடிக்கைகளை பல்வேறு தனி மனிதர்களும் நிறுவனங்களும் செய்யமுடியும் என்பதாகும். அதன்படி தனியாரா? அரசாங்கமா, உள்ளூராட்சி நிறுவனமா, கூட்டுறவுச் சங்கமா உற்பத்தி செய்வது எனத் தீர்மானிக்கப்படவேண்டும். தனியார் துறையும் தனியுரிமை, பங்குடமை, கம்பனி, போன்ற பல்வேறு பிரிவுகளைக் கொண்டுள்ளது. இதன்படி சமூகத்தின் விவசாய நடவடிக்கைகள், கைத்தொழில் நடவடிக்கைள், மீன்பிடி நடவடிக்கைகள் என்பவற்றில் யார் ஈடுபடவேண்டும். எந்த அளவில் உற்பத்தி செய்யவேண்டும், என்பது இங்கு தீர்மானிக்கப்படவேண்டும்.

3. யாருக்காக உற்பத்தி செய்வது?


பின்வரும் படத்தைப் பாருங்கள்



உரு 4.2

ஒரு பொருளாதாரம் குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி செய்யும் பொருட்களை பல்வேறு தனிநபர்கள், நிறுவனங்களிடையே எவ்வாறு பிரித்துக்கொள்வது என்பதே இப்பிரச்சினையின் மூலம் விளக்கப்படுகின்றது. அப்பொருட்கள் சமூகத்தின் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கானதா, உயர்ந்த வருமானம் பெறுபவர்களுக்கானதா என்பது தீர்மானிக்கப் படவேண்டும் இதற்கு முன் குறிப்பிட்டது போன்று உற்பத்திக் காரணிகளுக்காக வழங்கப்படும் கொடுப்பனவுகளான ஊதியம் அல்லது கூலி, வட்டி, வாடகை, இலாபம், ஆகிய வருமானங்களைப் பெற்றுக்கொள்ளும் அளவைப் பொறுத்தும் ஒவ்வொருவரும் பெறும் பொருட்களின் அளவு தீர்மானிக்கப்படும்.

4.1.4 பொருளாதார நடவடிக்கைகள், வரைவிலக்கணம்




உரு 4.3

மேற்படி உருவை ஆராயும்போது தெரிய வருவது, பொருளாதாரத்தில் பல நடவடிக்கைகள் இடம் பெறுகின்றன என்பதாகும். பயிர்ச்செய்கை, அகழ்தல், தயாரித்தல், களஞ்சியப்படுத்தல், வியாபாரம், விநியோகம், நுகர்வு என்ற பலவற்றை குறிப்பிடலாம்.

பொருளாதாரத்தில் காணப்படும் பற்றாக்குறையான வளங்களின் ஊடாக தம் அளவற்ற தேவைகள் விருப்பங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக சமூகத்தில் நடைபெறும் நடவடிக்கைகளை மூன்று பிரிவுகளாக நோக்கலாம்.

1. உற்பத்தி
2. பரிமாற்றம்
3. நுகர்வு

உற்பத்தி என்பது விருப்பங்கள், தேவைகளை, நிறைவேறும் வகையில் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி அவற்றின் இயல்பை மாற்றியமைப்பது அல்லது புதிதாக அமைப்பதாகும். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் அவற்றின் பயன்பாட்டுக்குகேற்ப இருவகையாகப் பிரித்து நோக்கப்படும். நுகர்வுத் தேவைகளை பூர்த்தி செய்யப் பயன்படும் பொருட்கள் நுகர்வு பொருட்கள் என்றும் உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் பொருள் உற்பத்திப் பொருள் எனவும் அழைக்கப்படும்.

உற்பத்திப் பொருட்களின் பயனைப் பொறுத்து அவை இடைநிலைப் பொருட்கள், மூலதனப் பொருட்கள் என்று பிரித்து நோக்கப்படும். ஒரு பொருளை உற்பத்தி செய்வதற்காக வேறொரு பொருளை இணைக்கவேண்டியிருப்பின் அது இடைப்பொருள் ஆகும். உற்பத்தி செய்வதற்காக பொருளை ஊட்டம் செய்வதற்காக இடைநிலைப்பொருள் உபயோகிக்கப்படும். இடைநிலைப் பொருட்களை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். உதாரணம் பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் பசளையைக் கூறலாம். மூலதனப் பொருட்கள் மீண்டும் மீண்டும் பயன்படுத்தக்கூடியவை. உதாரணம். கட்டடம், இயந்திரம் போன்றவை.

**செயற்பாடு 4.2**

பின்வரும் பட்டியலை உபயோகித்து இடைவெளியை நிரப்பவும்

நெடுஞ்சாலைகள், அணைக்கட்டுகள், தைத்த ஆடைகள், பசளை, சீமெந்து, உணவு பால்மா, விளையாட்டு மைதானம், சங்கீதம், விவசாய இரசாயாயனப் பொருட்கள், பஸ்வண்டி, கப்பல், விமான நிலையம், கட்டடம், தொழிற்சாலை, பாதணி, ஆடைநெய்யும் நூல், இறப்பர்.

| பொருள்வகை | பொருட்கள் |
|---|---|
| நுகர்வுப் பொருட்கள் | .................................................................... |
| இடைப்பொருட்கள் | .................................................................... |
| மூலதனப்பொருட்கள் | .................................................................... |

நுகர்வு என்பது விருப்பங்கள், தேவைகளை, நிறைவேற்றிக்கொள்வதற்காக பொருட்களையும் சேவைகளையும் பயன்படுத்துவதேயாகும். உணவுப்பானங்கள், ஆடையணிகள், பொழுதுபோக்கு இசையை ரசித்தல், பத்திரிகை வாசித்தல், வைத்தியப் பரிகாரம் பெறல் ஆகிய அனைத்தும் நுகர்வுகளாகும். மனிதனின் விருப்பங்கள், தேவைகளை நேரடியாக பூர்த்தி செய்யும் பொருட்கள் சேவைகளிலடங்கும்.

**பரிமாற்றம்**

பொருளாதாரத்தில் நிகழும் மற்றுமொரு முக்கிய நடவடிக்கை பரிமாற்றமாகும். சுயதேவைப் பொருளாதாரத்தில் தமக்குத் தேவையான பொருட்களைத் தாமே உற்பத்தி செய்து கொண்டதுடன் பொருட்களைப் பண்டமாற்றமும் செய்துகொண்டனர். ஆனால் நவீன சமூகத்தில் சந்தையில் பணம் கொடுத்து சகல பொருட்கள் சேவைகளையும் பரிமாறிக்கொள்ளும் வாய்ப்பு உண்டு. இன்றைய தொழில் நுட்ப முன்னேற்றத்துடன் பணம் மட்டுமல்லாது பணம் பெறுகின்ற அட்டைகள், அதாவது இலத்திரனியயில் பணமும் புழக்கத்திலுள்ளது.

பரிமாற்ற நடவடிக்கை உள்நாட்டில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியாக நடைபெறுகின்றது. இன்று உலகில் எந்த ஒரு நாடும் வேறொரு நாட்டுடன் பொருட்கள், சேவைகளைப் பரிமாற்றம் செய்யாமல், உலகில் எந்தநாடும் இல்லை என்ற நிலை இன்று காணப்படுகின்றது.

## 4.2 பல்வேறு பொருளாதார முறைகளை இனங்காணல் (முதலாளித்துவம், சோசலிசம், கலப்பு)

பொருளாதார முறை என்பது அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளத் தீர்த்துக் கொள்வதற்காக ஒரு சமூகம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள விதமாகும். அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முறையை அடிப்படையாகக் கொண்டே பொருளாதார முறைகள் இனங்காணப்படுகின்றன. அதன்படி பொருளாதார முறைகள் மூன்றாகும்.

1 முதலாளித்துவப் பொருளாதார முறை
2. சமதர்மப் பொருளாதார முறை
3 கலப்புப் பொருளாதார முறை

### 4.2.1 முதலாளித்துவப் பொருளாதார முறை

முதலாளித்துவப் பொருளாதார முறையின் கீழ் பொருளாதாரத்தின் சொத்துக்கள், வளங்கள் யாவும் தனியார் துறைக்கே சொந்தமாயிருக்கும். உதாரணமாக தொழிற்சாலைகள், நிலம், நீர் மின்சாரம், இயந்திரங்கள், நீர்ப்பாசனம் போன்ற அனைத்துப் பணமீட்டும் வழிகளும் தனியார் உடமைகளாக இருக்கும். முதலாளித்துவ பொருளாதாரத்தில் இலாபம் உழைக்கும் ஒரே நோக்கில் விலைப் பொறிமுறையின் அடிப்படையில் சகல பொருளாதார நடவடிக்கைகளும் தீர்மானிக்கப்படும். சந்தைச் சக்திகளான கேள்வி, நிரம்பல் ஊடாக அவை பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கப்படும். அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக தனியுடைமை, பங்குடைமை, வரையறுக்கப்பட்ட கம்பனி, போன்ற தனியார் துறை நிறுவனங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. இங்கு அவர்களின் அடிப்படை நோக்கம் உச்ச இலாபம் பெறுவதாகும்

வளங்களைப் பயன்படுத்தி எதனை எவ்வளவு, யாருக்காக, உற்பத்தி செய்வது என்பது விலைபொறிமுறையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும். எதனை எவ்வளவு உற்பத்தி செய்வது என்ற பிரச்சினையை எதிர்கொள்ளும் முயற்சியாளன் இலாபம் தரும் பொருட்களை மட்டும் உற்பத்தி செய்வதுடன் இலாபம் தராத பொருட்களை உற்பத்தி செய்வதில் இருந்து தவிர்த்துக்கொள்வதற்காக எவ்வாறு உற்பத்தி செய்வது என்ற பிரச்சினைக்குத் தீர்வு காண்பதால் உச்ச இலாபம் கிடைக்கும் உற்பத்தி நுட்பங்களைத் தெரிவு செய்து கொள்வான். ஊழிய நுட்பங்கள், மூலதன நுட்பங்கள் மூலம் உற்பத்தி செலவு குறைந்த நுட்பமுறையைத் தெரிவு செய்வான். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் யாருக்காக விலைபடுத்தப்படும் என்ற பிரச்சினையும் விலைப்பொறிமுறையினாலேயே தீர்மானிக்கப்படும். அதன்படி உற்பத்திகளைக் கொள்வளவு செய்யும் ஆற்றலுள்ள பிரிவினருக்கு உற்பத்திகள் விலைப்படுத்தபடும்.

முதலாளித்துவப் பொருளாதாரத்தில் இலாபம் உழைத்தல் முக்கிய இடம் பெறுவதாலும் பொருளாதார நடவடிக்கைகள் **"தனியார் உடமைகளாக இருப்பதாலும் வளப்பங்கீட்டில் சமமின்மை"** காணப்படும். இதன் மூலம் சமூகத்தில் முதலாளி, தொழிலாழி வர்க்கம் உருவாகும். விளம்பரம் போன்ற உத்திகள் மூலம் நுகர்வோரைத் தமது உற்பத்திகள் மீது ஈர்த்துக்கொள்வதற்கான பல்வேறு முறைகளைக் கையாள்வதால் நுகர்வோருக்கு தாம் எப்பொருளை தெரிவு செய்வது என்ற சுதந்திரமுண்டு. தனியார் முயற்சிப் பொருளாதாரம் என்றும் இம்முறை அழைக்கப்படும்.

**செயற்பாடு 4.3**

1. முதலாளித்துவப் பொருளாதார முறையின் அடிப்படைப் பண்புகள் நான்கு தருக.

   1. ........................................................................................
   2. ......................................................................................
   3. ......................................................................................
   4. ......................................................................................

2. (1) முதலாளித்துவ பொருளாதாரம் நடைமுறைபடுத்தப்படும் நாடுகள் 10ஐக் குறிப்பிடுக

   (11) நீங்கள் குறிப்பிட்ட நாடுகளை உலகப் படத்தில் பெயரிடுக

### 4.2.2 சமதர்மப் பொருளாதார முறை

சமதர்ம (சோசலிச) பொருளாதார முறை நிலவும் நாடுகளில் உற்பத்தி வளங்கள் அரசின் உடைமையாக இருக்கும். உற்பத்தி பரிமாற்ற நடவடிக்கைளும் இலாபத்தை அடிப்படையாகக் கொண்டதாக அமையாது. சமூக நலனை மையமாக வைத்தே உற்பத்தித் தீர்மானங்கள் எடுக்கப்படும். இங்கு ஒரு மத்திய திட்டமிடற் சபையின் மூலம் பொருளாதார நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும்.

இத்தகைய நாடுகள் மத்திய திட்டமிடற் பொருளாதாரம் கொண்ட நாடுகளாகவும் அறிமுகப்படுத்தப்படும்.

**செயற்பாடு 4.4**

சமதர்ம பொருளாதார முறையின் முக்கிய இயல்புகள் 4 தருக.

1. ........................................................................................
2. ........................................................................................
3. ........................................................................................
4. ........................................................................................

**ஒப்படை 4.1**

1 சமதர்ம பொருளாதாரம் நடைமுறையிலுள்ள 5 நாடுகள் தருக.

2. சமதர்மப் பொருளாதாரம் நிலவும் நாடுகளை தேசப்படத்தில் இனங்காண முயற்சிக்கவும்.

### 4.2.3. கலப்புப் பொருளாதார முறை

மேற்குறிப்பிட்ட முதலாளித்துவ சமதர்ம பொருளாதார இயல்புகள் இரண்டையும் கொண்ட பொருளாதார முறை கலப்புப் பொருளாதாரம் எனப்படும். சொத்துக்கள் வளங்கள் தனியாருக்கும் அரசுக்கும் சொந்தமாக இருக்கும். தனியார் துறை இலாப நோக்கத்தையும் அரசாங்கம் சமூக நல நோக்கத்தையும் கொண்டு உற்பத்தியில் ஈடுபடும். அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அரசாங்கம் தனியார் ஆகிய இருசாராரும் நடவடிக்கை எடுப்பர். உலகில் கூடிய அளவு நாடுகளில் இத்தகைய பொருளாதார முறையே காணப்படுகின்றன. சில நாடுகளில் அரசின் தலையீடு கூடுதலாக இருக்கும். சில சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு துறை சார்ந்ததும் கூடிய அல்லது குறைந்த அளவு தலையீடு காணப்படும்.

**ஒப்படை 4.2**

மேற்கூறிய பொருளாதார முறைகளின் சிறப்பியல்புகள் ஊடாக இலங்கையின் பொருளாதார முறையை ஒப்பீட்டு ரீதியாக ஆராய்க. அவற்றை உள்ளடக்கி பாடசாலை சஞ்சிகைக்கு ஒரு கட்டுரை வரைக.

## 4.3 சந்தைப் பொருளாதார எண்ணக்கரு

அண்மிய தசாப்தங்களில் உலகப் பொருளாதார வளர்ச்சியில் ஏற்பட்டுவரும் மாற்றம் சந்தைப் பொருளாதார முறையாகும். பல நாடுகள் தமது நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்யும் உத்தியாக இம்முறையைப் பின்பற்றுகின்றன. சமதர்ம பொருளாதார முறை நிலவிய சில நாடுகளும் தமது பொருளாதாரத்தை சந்தைப் பொருளாதார முறையாக மாற்றம் செய்துள்ளன.

உதாரணமாக ரஷ்யா, சீனா, போலந்து, ஆகிய நாடுகளைக் குறிப்பிடலாம். இவ்வாறு சந்தைப் பொருளாதாரமாக மாற்றியமைப்பதில் செல்வாக்குச் செலுத்தும் பல காரணங்களுண்டு.

1. மனித தேவைகளையும், விருப்பங்களையும் நிவர்த்தி செய்யவேண்டிய ஆயிரக்கணக்கான பொருள்களைத் உற்பத்தி செய்வதில் காணப்படும் நடைமுறைப் பிரச்சினை
2. போட்டித்தன்மை காணப்பட்டமையினால் புத்தாக்கத்தில் முயற்சியின்மை
3. தாம் விரும்பியதை தெரிவு செய்வதற்கான நுகர்வோரின் சுதந்திரம் பாதிக்கப்பட்டமை
4. ஏற்கனவே இருந்த முறையில் காணப்பட்ட நெகிழ்வற்ற தீர்மானம் எடுக்கும் முறை காரணமாக உற்பத்தி விநியோகம் என்பன தாமதமடைந்தமை

ஒரு பொருளாதாரம் எதிர் நோக்கும் அடிப்படை பொருளாதாரப் பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்காக கேள்வி நிரம்பல் சக்திகளை அடிப்படையாகக் கொண்ட விலைப் பொறிமுறையினால் தீர்மானிக்கும் பொருளாதாரம் சந்தைப் பொருளாதார முறை எனப்படும். எவரதும் நெறிப்படுத்தலின்றி விலைப்பொறி முறையானது பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் காணும் வல்லமை கொண்டது.

சந்தைப் பொருளாதாரத்தின் நோக்கம் தனியார் இலாபமாகும். இதன்படி இலாபம் கிடைப்பதை உற்பத்தி செய்யவும் இலாபம் கிடைக்காததில் இருந்து தவிர்த்துக் கொள்ளவும் முன்வருவர். பொருளை உற்பத்தி செய்வதற்கான செலவைவிட (கிரயம்)சந்தைவிலை அதிகமெனின் பாரிய இலாபம் கிடைப்பதால் அத்தகைய பொருளைத் தெரிவு செய்வர். அதன்படி இலாப நோக்குத் துறைகளை நோக்கியே வளங்கள் குவிகின்றன.

**சந்தைப் பொருளாதார முறையின் விரும்பத்தகாத இயல்புகள்**

1. எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் குறித்துக் கவனம் செலுத்தாமை, எதிர்க்கணிய வெளிவாரி விளைவு என்பது ஒரு உற்பத்தி அல்லது நுகர்வு காரணமாக அதனுடன் தொடர்பற்ற பிரிவினர்கள் மீது செலுத்தும் செல்வாக்காகும். சந்தைப் பொருளாதாரத்தில் சூழல் மாசடைதல் போன்ற எதிர்க்கணிய வெளிவாரி விளைவுகள் ஏற்படும். உதாரணமாக ஒரு தொழிற்சாலையினால் சுற்றுப்புற சூழலுக்கு ஏற்படும் தீமையைக் குறிப்பிடலாம்.

2. இலாபம் உழைக்கும் நோக்கில் நின்று கருமமாற்றுவதால் மக்கள் நலன் பேணும் பொருட்கள் உற்பத்தி செய்யப்படாமை
3. வருமானப் பங்கீட்டில் பாரிய முரண்பாடு காணப்படும்

4. பொருட்களை விற்பனை செய்வதற்கு அதிக விளம்பரம் செய்ய வேண்டியிருப்பதால் அது நுகர்வோரின் கொள்வனவுச் சக்தியைப் பாதிக்கும்.

**செயற்பாடு 4.5**

- சந்தைப் பொருளாதார முறையின் கீழ் இனங்காணக் கூடிய நல்ல தீய விளைவுகள் இரண்டு வீதம் விளக்குக.

## 4.4 இலங்கையின் இன்றைய பொருளாதார முறையும் அபிவிருத்தியும்

இலங்கைப் பொருளாதாரத்தில் 1977ஆண்டுக்கு முன்பு சமதர்ம பொருளாதார இயல்புகளுடன் கூடிய கலப்புப் பொருளாதார அம்சங்கள் காணப்பட்டன. பொருளாதார நடவடிக்கைளில் அரசாங்கத்துறை கூடிய ஈடுபாட்டைக் கொண்டிருந்தது. விவசாயம், கைத்தொழில்; சேவை ஆகிய சகல துறைகளிலும் அரச துறையின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் இருந்தது. 1971இன் வணிக நிறுவனங்களை அரசமயமாக்கல் நடவடிக்கையின் கீழ் அரச முயற்சி மேலும் அதிகரித்தது. உள்நாட்டு வளங்களிலிருந்து உச்ச பயனைப் பெற்று பொருளாதார அபிவிருத்தியடைவதற்காக உள்நாட்டு மூலப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட கைத் தொழில்களிலும் விவசாயத் துறையிலும் விருத்திக்கான பல நடவடிக்கை எடுக்கப்பட்டது.

1977இன் பின் உள்நாட்டு பொருளாதாரக் கொள்கையில் பாரிய மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. சந்தைப் பொருளாதார கொள்கைகளின் கீழ் தனியார் துறையினரின் பங்களிப்பை அதிகரிக்கவும் ஊக்குவிக்கவும் தேவையான கைத்தொழில் கொள்கை அமுல் நடத்தப்பட்டது. உள்நாட்டு கைத்தொழில்களைப் பாதுகாப்பதற்காக சுங்க வரிகள் நீக்கப்பட்டன. வரிக்கொள்கை எளியாமையாக்கப்பட்டதுடன் சுதந்திரமான வர்த்தகத்திற்கான வாய்ப்பு அதிகரிக்கப்பட்டது. இதற்காக வெளிநாட்டு முதலீட்டாளர்களை கொண்டு வருவதற்கான பல ஊக்குவிப்புகள் வழங்கப்பட்டன. 1978 இல் அமைக்கப்பட்ட பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு 1992 முதல் இலங்கை முதலீட்டு சபை என்று அழைக்கப்படுகிறது, இதனூடாக சுதந்திர வர்த்தக வலயம் அமைக்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி கட்டுநாயக்கா, பியகம, கொக்கல ஆகிய இடங்களில் சுதந்திர வர்த்தக வலயங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அரசாங்கம் பலநோக்கு மகாவலித்திட்டத்தை துரித திட்டமாக அமுல் படுத்தப்பட்டு விவசாய நடவடிக்கைகளின் அபிவிருத்திக்கான நீர்வழங்கல், நீர்வலு உற்பத்தி வேலைவாய்ப்பு வழங்குதல் காணியற்றோருக்கு காணி வழங்குதல் போன்ற நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தது.

இலங்கை முதலீட்டுச் சபை வழங்கிய சலுகைகளினால் அநேகமான நாடுகள் முதலீட்டுக்காக இலங்கை வந்தன. ஏற்றுமதி ஊக்குவிப்பு, வரிச்சலுகை, உள்நாட்டு வளங்கள், ஊழியம் என்பவற்றைக் கைத்தொழில்களுக்குப் பெற்றுக்கொள்ளும் வசதிகள் வழங்கப்பட்டமையால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெருமளவில் இலங்கை வந்து கைத்தொழில்களை ஆரம்பித்தனர். இதன் மூலம் மூலதனப் பற்றாக் குறைக்குப் பரிகாரம் கிடைத்ததுடன் புதிய தொழில் வாய்ப்புகள் உருவானதுடன் சர்வதேச தொழில்நுட்ப அறிவும் இலங்கைக்குக் கிடைத்தது. உள்நாட்டில் துறைமுகங்கள், விமான நிலையம், பெருந்தெருக்கள், தொலைபேசி வசதிகள் அதிகரிக்கப்பட்டமை பொருளாதார அபிவிருத்திக்கு ஏதுவாக அமைந்தது

1990ஆம் தசாப்தத்தின் இறுதிப் பகுதியில் அரசாங்கம் தனியார் மயமாக்கல் கொள்கைளை அமுல் நடத்தியமையால் விவசாய, கைத்தொழில் துறைகளில் நிறுவனங்களும் தொழிற் சாலைகளும் தனியார் மயமாக்கப்பட்டன. இதற்கான சில உதாரணங்கள் கீழே தரப்படுகின்றன.

| அரசாங்க நிறுவனத்தின் பெயர் | தனியார் மயமாக்குதலின் வீதம் | தனியார் மயமாக்கப்பட்ட வருடம் |
|---|---|---|
| விவசாயம் | | |
| வரையறுக்கப்பட்ட பொகவந்தலாவ பெருந்தோட்ட கம்பனி | 100 | 1995 செப்டம்பர் |
| வ.ப. கேகாலை பெருந்தோட்ட கம்பனி | 100 | 1995 ஒக்டோபர் |
| ஹங்குராங்கொட விதை நெல் கம்பனி | உடமையை விற்றல் | 1995 ஜூலை |
| செவனகல சீனிக் கம்பனிக் கைத்தொழில் | 100 | 2002 ஜூலை |
| துல்கிரிய புடவை ஆலை | 100 | 1990 பெப்ரவரி |
| வ.ப. இலங்கை உருக்கு கம்பனி | 100 | 1991 ஒக்டோபர் |
| வ.ப. லங்கா பீங்கான் கம்பனி | 100 | 1992 ஜூன் |
| வ.ப. ருஹூனு சீமெந்து | 85 | 193 ஜனவரி |
| வ.ப. பிரிமா (இலங்கை) கம்பனி | 100 | 1991 ஒக்டோபர் |
| நிதிச்சேவை | | |
| இலங்கை காப்புறுதிக் கம்பனி | 100 | 2003 ஜூன் |
| வ.ப. ஸ்ரீலங்கா டெலிகொம் | 5.05 | 1997 ஆகஸ்ட் |

அட்டவணை 4.1

**செயற்பாடு 4.6**

- மத்திய வங்கி அறிக்கையை பரீசிலனை செய்து தனியார் மயமாக்கப்பட்ட அரசதுறை நிறுவனங்கள் கைத்தொழில்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுங்கள்
- கைத்தொழிலை பிரதேச ரீதியாக பன்முகப்படுத்தவதற்காக 1990 இன் பின் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பொருளாதார விருத்திக்கு பல வழிகளில் பங்களிப்புச் செய்தன.
- 200 ஆடை நெசவுசாலைகள் ஆரம்பிக்கப்பட்டமை.
- கைத்தொழிற் பூங்காக்கள் ஆரம்பிக்கப்பட்டமை

**செயற்பாடு 4.7**

1. இலங்கையில் இன்று நடைமுறையிலுள்ள
   - கைத்தொழில் நகரங்கள்
   - கைத்தொழில் பூங்காக்கள்
   - ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்கள்
   - ஏற்றுமதிக் கிராமங்கள்

   தொடர்பான தகவல்களைத் திரட்டி ஒரு சிறு நூலை ஆக்குக

2 கைத்தொழில் நகரம், கைத்தொழில் பூங்கா, ஏற்றுமதி செயற்பாட்டு கிராமங்கள். அமைக்கப்பட்டுள்ள இடங்களை இலங்கை தேசப்படத்தில் குறியிட்டு பெயரிடுங்கள்.

1977 இன்பின்னர் ஏற்பட்ட பொருளாதாரக் கொள்கை மாற்றங்களினால் மொத்த தேசிய உற்பத்தியில் விவசாயத் துறையின் பங்களிப்பு வீழ்ச்சியடைந்ததுடன் கைத்தொழில் துறையின் பங்களிப்பு அதிகரித்தது. அத்துடன் சேவைத்துறையின் பங்களிப்பு கைத்தொழில் துறையைவிட அதிகரித்தது.

| மொத்த தேசிய உற்பத்தியின் விவசாய, கைத்தொழில் சேவைத்துறைகளின் பங்களிப்பு | | | |
|---|---|---|---|
| வருடம் | விவசாயத்துறைகளின் பங்களிப்பு | கைத்தொழில்துறை பங்களிப்பு | சேவைத்துறை பங்களிப்பு |
| 1977 | 26.7 | 22.5 | 50.1 |
| 1996 | 18.4 | 30.4 | 51.2 |
| 2004 | 17.9 | 26.4 | 55.7 |
| 2005 | 17.2 | 27.0 | 58.8 |

அட்டவணை 4.2

அத்துடன் ஏற்றுமதி வருமானத்தில் விவசாய ஏற்றுமதிகளின் பங்களிப்பு வீழ்ச்சியடைந்து கைத்தொழில் ஏற்றுமதியின் பங்களிப்பு விரைவாக அதிகரித்தது. 2004இன் பின் நடைமுறைப்படுத்தப்பட்ட விவசாயத்துறைகளில் அபிவிருத்தி உத்திகள் மூலம் அத்துறைகளின் பங்களிப்பு அதிகரிக்கும் போக்கு காணப்படுகின்றது.

| ஏற்றுமதி வருமானத்தில் கைத்தொழில், விவசாய துறைகளின் பங்களிப்பு | | |
|---|---|---|
| வருடம் | ஏற்றுமதி வருமானத்தில் விவசாய ஏற்றுமதிகளின் பங்கு | ஏற்றுமதி வருமானத்தில் கைத்தொழில் ஏற்றுமதியின் பங்கு |
| 1977 | 79.3 | 18.5 |
| 2004 | 14.2 | 78.3 |
| 2005 | 18.2 | 78.3 |

அட்டவணை 4.3

**செயற்பாடு 4.8**

- மத்திய வங்கி அறிக்கையை பரிசீலனை செய்து (2004இன்பின்) விவசாயம், கைத்தொழில் சேவை ஆகிய துறைகளின் கீழ் வரும் பொருட்களை வகைப்படுத்தவும்

மேற்கூறிய தகவல்களின்படி 2004 ஆம் ஆண்டின் விவசாய ஏற்றுமதி வருமான அதிகரிப்புக்கான காரணங்கள் பலவுண்டு.

உதாரணமாக

- ஏற்றுமதிச் சந்தைசார் கைத்தொழில்களின் சீரான செயற்பாடு
- உள்நாட்டு நுகர்வோர் கேள்வி அதிகரித்தமை
- தொலைத் தொடர்பு துறைமுகம் தகவற்தொழிட்நுட்பம், ஆகிய கீழ்க் கட்டமைப்பு வசதிகள் விருத்தியடைந்தன.
- யுத்த நிறுத்தம் தொடர்ந்து இருந்தமை
  போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பொருளாதார அபிவிருத்தி அதிகரிப்பில் சேவைத்துறையின் பங்களிப்பும் முக்கியமாகும். அத்துடன் மொத்த, சில்லறை வியாபாரம், தோட்டங்கள் மற்றும் உணவுசாலைகள், களஞ்சியப்படுத்தல் தொடர்பாடல் நிதிச்சேவைகள் இதில் முக்கியமானவை

நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்வதில் பொருளாதாரத்துறை மட்டுமன்றி சமூக, கலாசார துறைகளும் முக்கியமாகும். ஏனைய அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையின் சமூகத்துறை உயர் பெறுமானத்தைக் காட்டி நிற்கிறது. அது அபிவிருத்தியடைந்த நாடுகளின் தரவுகளை நெருங்கியதாக உள்ளது. நிலைபேறான அபிவிருத்தியை அடைந்துகொள்வது குறித்து 21ஆம் நூற்றாண்டில் முக்கிய கவனம் செலுத்தப்படுகின்றது.

**நிலைபேறான அபிவிருத்தி என்பது**

பொருளாதார விருத்தியுடன் மட்டுப்படாது அதன் பிரதிபலன்கள் சமமாகப் பங்கிடப்பட்டு, சுற்றாடல் மாசடைவதற்குப் பதில் அதனைப் பலப்படுத்தி அபிவிருத்தி நோக்கிச் செல்வதாகும்.

மேலும் விளக்கினால் அபிவிருத்தியூடாக எதிர்காலச் சந்ததியினருக்கு அவர்களின் ஆசைகளை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புகளை மட்டுப்படுத்தாது இன்றைய தேவைகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகும்.

நிலைபேறான அபிவிருத்தியை அடைந்து கொள்வதை நோக்காகக் கொண்டு பொருளாதாரக் கொள்கையை திட்டமிடுவதில் அரசாங்கம் ஆர்வத்துடன் செயலாற்றுகின்றது.

2000ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ஐக்கியநாடுகளின் மிலேனியம் மாநாட்டின்போது உலகத் தலைவர்கள் கூடியதில் வறுமை, நோய், எழுத்தறிவின்மை , சூழல்மாசுறுதல், பெண்களுக்கெதிரான வன்முறைகள் என்பவற்றை இல்லாதொழிப்பதற்காக ஒரு குறிப்பிட்ட காலத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு குறிக்கோள் தொகுதியும் இலக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன.

**ஒப்படை 4.3**

2000 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மாநாட்டில் உலகத் தலைவர்கள் ஏற்றுக்கொண்ட மிலேனியம் குறிக்கோள்கள் எட்டையும் (8) தேடி அறிக்கையிடுக.

சகஸ்ர (மிலேனிய) இலக்குகளை நோக்கிச் செயலாற்றும் போது இலங்கையின் பொருளாதார நோக்கங்களையும் அதற்கு இணையாக பொருத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி அபிவிருத்தி இலக்கை நோக்கிய பயணத்தில் நாம் அடைந்துள்ள வெற்றி குறித்து மகிழ்ச்சியடையலாம்..

இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான இன்றைய நிலை

1. வறுமை கோட்டுக்குக் கீழ் உள்ள மக்களின் வீதம் 1990/91ஆம் வருடத்தில் 26.1 ஆகும் 2002இல் அது 22.7 ஆகும்

2. 2000/2001இல் ஆரம்பக் கல்வியில் பிரவேசித்தவர்கள் வீதம் 97% ஆகும் 2002இல் அது 97.9% ஆகும்.

3. 1990இல் ஐந்து வயதுக்கு குறைந்தவர்களின் மரண வீதம் ஆயிரத்தில் 23 ஆக இருந்ததுடன் 2001 இல் அது 19 ஆகக் குறைந்துள்ளது. 2003 இல் அது ஆயிரத்தில் 11.1 ஆகக் குறைந்துள்ளது.

4. சுத்தமான குடிநீர் கிடைக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை 1992இல் நூற்றுக்கு 62 ஆக இருந்ததுடன் 2000இல் அது 70 ஆகவும் 2005இல் 92ஆகவும் அதிகரித் துள்ளது.

5. 2000ஆம் ஆண்டில் தனிநபர் தேசிய உற்பத்தி 813 அமெரிக்க டொலர்களாக இருந்ததுடன் 2004இல் அது 1030 ஆக அதிகரித்தது. 2005இல் 1183 அமெரிக்க டொலர்களாக அதிகரித்தது.

6. எழுத வாசிக்க தெரிந்தவர்களது (எழுத்தறிவு) வீதம் 1996/97இல் 88.6 ஆக இருந்ததுடன் 2000ஆம் ஆண்டின் பின் அது 90இற்கும் அதிகமாகும்.

7. அபிவிருத்தியை அளவிடும் நவீன முறை அளவுகோலாகக் கருதப்படும் மானிட விருத்திக் குறிகாட்டியின் படியும் இலங்கை ஒரு நடுத்தர அபிவிருத்தி நாடாக கருதப்படுகின்றது. 177 நாடுகளில் இலங்கை 93வது இடத்திலுள்ளது.

வாழ்க்கைத் தரத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்காக வறுமையொழிப்பு, வேலையின்மையை ஒழித்தல், நிலைபேறான அத்திவாரத்தில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவது அவசியம் என இலங்கை மத்திய வங்கி அறிக்கை கூறுகின்றது. எதிர்பார்க்கப்படும் பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வதற்கான முன்மொழிவுகள் அரசாங்கத்தின் கொள்கை விளக்க வெளியீட்டில் இடம்பெற்றன.

அதன்படி அபிவிருத்தி உத்திகளாக நடைமுறைப்படுத்த ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய அபிவிருத்தி திட்டங்கள் பல உண்டு.

அவற்றிற்கான சில உதாரணங்கள்

- ஆயிரம் குளங்களையும் புனர் நிர்மாணம் செய்யும் வேலைத்திட்டம்
- கிராமங்களுக்கு நீர் வழங்குதல்
- "மகநெகும" எனப்படும் கிராமிய வீதி அமைப்புத் திட்டம்
- சிறிய மற்றும் நடுத்தர கைத்தொழில்களுக்கான கடன் திட்டம்
- பசளை மானியம் வழங்குதல்

அபிவிருத்தியை நோக்கிய பயணத்தில் நாட்டில் ஏற்பட்டுள்ள பயங்கரவாதச் செயற்பாடுகள், உலக சந்தையில் பெற்றோலிய விலையுயர்வு போன்ற தடைகளும் காணப்படுகின்றன.

**செயற்பாடு 4.6**

1. பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஊடாக புதிய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றிய ஒரு அறிக்கை தயாரிக்குக

2. அபிவிருத்தி நோக்கிய பயணத்தில் எதிர்நோக்க வேண்டியுள்ள பிரச்சினைகளையும் அவற்றைத் தீர்ப்பதற்கு நீங்கள் முன்வைக்கும் பிரேரணைகளையும் உட்படுத்திய கதை ஒன்றை எழுதுக

## 4.5 தொழில்நுட்ப முன்னேற்றமும் உலக மயமாக்கலும் உலகப் பொருளாதாரத்தின் மீதும் இலங்கை மீதும் ஏற்படுத்தும் செல்வாக்கு

### 4.5.1 தொழில் நுட்ப முன்னேற்றம்



உரு 4.4
தற்கால தொழில்நுட்ப விருத்தியைக் குறிக்கும் படத்தொகுதி

தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பெறுபேற்றால் ஆக்கப்பட்டுள்ள நவீன உற்பத்திகள் சில மேலே காட்டப்பட்டுள்ளன. தொழில் நுட்ப முன்னேற்றம் மனித நடவடிக்கைகளை இலகுபடுத்தியுள்ளது. எமது முன்னோர்கள் கனவில் கூட கண்டிராதவைகள் இன்று உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. மனிதனின் சிந்தனையில் ஏற்பட்டமாற்றம் தொழில் நுட்பத்தின் பின்னணியாக அமைந்துள்ளது.


பன்னெடுங் காலமாக நீண்ட துாரம் பயணம் செய்த மனிதன் மிகவும் சிரமப்பட்டு இன்று அனுபவிக்கும் தொழில் நுட்ப வசதிகளை வெற்றி கொண்டுள்ளான். இடையர்யுகம், விவசாய யுகங்களின்போது தொழில்நுட்ப முன்னேற்றத்தின் ஆரம்ப இயல்புகளை அனுபவித்த மனிதனின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றத்துடன் அது மேலும் விருத்தி பெற்றது ஆற்றங்கரை நாகரீகம், பண்டைய உரோம கிரேக்க நாகரிகங்களில் காணப்பட்ட தொழில்நுட்ப முன்னேற்றம்பற்றி நீங்கள் முன்னர் கற்றுள்ளீர்கள். பதினைந்தாம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் ஏற்பட்ட தொழில்நுட்ப விஞ்ஞான மறுமலர்ச்சியின் விளைவாக புத்தறிவு, தொழில் நுட்பத்தை தேடியறிதல் என்பன வேகமாக இடம் பெற்றன. அதன் பெறுபேறாக நாடுகாண் பயணங் (புதிய நாடுகளைக் கண்டு பிடித்தமை, புதிய சந்தைகளைத் தேடிக் கொண்டமை)கள் நடைபெற்றன. மனிதன் தனது அன்றாட கருமங்களை நிறைவேற்றிக்கொள்ள மிகவும் சிரமங்களை எதிர்நோக்கவேண்டியிருந்ததுடன் அதற்காக நேரத்தை மிச்சம் பிடிக்கக்கூடிய முறைகளையும் உபகரணங்களையும் கண்டு பிடித்தான். இந்நிலைமேலும் விருத்தியடைந்து தொழில் நுட்பம் முழு உலகிலும் வியாபித்து அகிலமே ஒரு கிராமமாக மாறவும் காரணமாய் அமைந்தது.

தொழில் நுட்பத்தின் பெறுபேற்றை அனுபவிக்கும் சந்தர்ப்பம் பற்றி வகுப்பு நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள். அவற்றுள் -

இங்கிலாந்தில் அல்லது நியூசிலாந்தில் நடைபெறும் கிரிக்கெட் ஆட்டத்தை எமது வகுப்பறையில் இருந்த வண்ணம் பார்த்து இரசித்தல்.

- நண்பருக்கு ஒரு ஈமெயில் செய்தியை அனுப்புதல்
- இணையத்தில் நாளாந்தம் பத்திரிகை வாசித்தல்
- உலகில் வெவ்வேறு நாடுகளில் உற்பத்தி செய்த பொருள்களைப் பாவித்தல்
  என்பன சிலவாகும்.

**தொழில்நுட்பம் இன்று உலகம் பூராவும் அனைத்துத் துறைகளிலும் புகுந்துள்ளது**




மேற்காட்டிய துறைகள் மட்டுமன்றி நவீன போராயுதங்கள் யுத்த உபகரணங்கள் உற்பத்தி போன்ற சமூக அழிவுக்கு காரணமாக அமையும் உற்பத்திகளும் தொழில் நுட்ப முன்னேற்றத்தின் விளைவேயாகும். தொழில்நுட்பத்தின் விளைவுகள் மனித நடவடிக்கைகளை இலகுபடுத்த உதவுவது போன்றே மனிதனின் ஆயுள் சுருங்கவும் சுற்றாடல் மாசடையவும் உலகை யுத்த நிலைமைக்கு இட்டுச் செல்லவும் காரணமாய் அமைந்துள்ளன

**ஒப்படை 4.4**

"தொழில்நுட்பம் மனிதனின் முன்னேற்றத்தைப் போன்றே அழிவுக்கும் காரணமாயுள்ளது" என்ற தலைப்பில் ஆசிரியரின் உதவியுடன் ஒரு விவாதத்தைக் ஏற்பாடு செய்யுங்கள்.

உலகநாடுகள் அபிவிருத்தியை நோக்கி முன்னேற்றமடைவதற்கான அடிப்படைக் காரணம் தொழில்நுட்ப அறிவைக் கண்டறிந்தமையும் அவற்றை தம் பொருளாதார முயற்சிகளில் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தமையுமாகும். உற்பத்தி செய்யப்பட்ட இயந்திரங்களும் உபகரணங்களும் மிகவும் வினைதிறன் வாய்ந்தவையாக முன்னேற்றமடைந்துள்ளன

உதாரணமாக

- கல்விபெற, புத்தறிவைத் தேடிச்செல்ல இணையம் உதவுகின்றது.
- ஒரு கணப்பொழுதில் ஆயிரக்கணக்கான பிரதிகள் அச்சடிக்கக்கூடிய அச்சியந்திரம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.
- இணையத்தினூடாக வைத்திய உதவி பெறுதல்.
- பெருந்தொகை தரவுகள் தகவல்களைச் சேகரித்து வைக்கும் உபகரணங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இவை தொழில் நுட்ப முன்னேற்றத்தின் ஒரு அணுஅளவு மட்டுமே

### 4.5.2 உலகப் பொருளாதாரத்திலும் இலங்கை பொருளாதாரத்திலும் பூகோள மயமாக்கல் செலுத்தும் செல்வாக்கு

தொழில் நுட்ப முன்னேற்றத்துடன் முழு உலகமும் நெருங்கியுள்ளதை நீங்கள் அறிவீர்கள்

பூகோளமயமாதல் என்பது முழு உலகும் ஒரு கிராமமாக (பூகோளக்கிராமம்) ஆகுவதாகும். தொழில்நுட்ப ரீதியாக்கப் பெற்ற முன்னேற்றம் ஒவ்வொரு துறைவியிலும் பரவியதன் மூலம் பல துறைகளிலும் பரந்த முன்னேற்றம் நிகழ்ந்தது. தொடர்பாடல், போக்குவரத்து, வெளிநாட்டு வர்த்தகம், வெளிநாட்டு முதலீடு ஆகிய துறைகளுக் கூடாக உலக நாடுகள் ஒரே பொருளாதாரமாக இணைந்துள்ளது. நாடுகளின் எல்லைகளை உடைத்து ஒரு மொழி பேசும் ஒரு கலாசாரம் கொண்ட ஒரு பண அலகை பரிமாற்றம் செய்யும் நிலையை நோக்கி மாற்றமடைந்து வருகின்றது. உற்பத்திச் செயலொழுங்கின் ஒரு பிரிவு ஒரு நாட்டிலும் மற்றொரு பிரிவு வேறொருநாட்டிலும் இயங்கி உற்பத்திச் செயலொழுங்கு பல நாடுகளில் பரவிக் காணப்படுகின்றது

அண்மைய ஆண்டுகளில் ஏற்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பத்தின் துரித வளர்ச்சியின் பயனாக முன்னணி நாடுகள் அரசியல் ரீதியான தொடர்புகளை பரஸ்பரம் மேம்படுத்திக் கொண்டமையால் இத்துறையில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதன்மூலம் அந்நாடுகளிடையே சமமான பொருளாதார ஒருமைப்பாடும் தோன்றியுள்ளது. இது முழு உலகையும் ஒரு சந்தையாக மாற்ற உதவியுள்ளது.

உலகப், பொருளாதாரம் குறித்துக் கவனம் செலுத்துவோமானால் உலகம் ஒரே சந்தையாக வடிவம் பெற்றுள்ளதைக் காணலாம். உதாரணமாக இலங்கை தேயிலையை உற்பத்தி செய்வது இலங்கைக்காக மட்டுமல்ல. அமெரிக்கா கோதுமையை உற்பத்தி செய்வது அவர்களுக்காக மட்டுமல்ல. மத்திய கிழக்கில் பெற்றோலிய உற்பத்தியும் அவர்களுக்காக மட்டுமன்று. உலகின் ஏனைய நாடுகளுக்கும் அவை விநியோகிக்கப்படுகின்றன. அனைத்து நாடுகளும் தமது தேவைகளை நிறைவுபடுத்திக்கொள்ள ஏனைய நாட்டு உற்பத்திகளையும் பரிமாறிக்கொள்கின்றன. அத்துடன் உலக சந்தையில் நடைபெறும் ஒவ்வொரு மாற்றமும் ஒவ்வொருநாட்டின் பொருளாதாரத்திலும் செல்வாக்குச் செலுத்துவதைக் காணலாம். உதாரணமாக உலக சந்தையில் பெற்றோலிய விலை அதிகரிப்பு இலங்கையின் பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதுவும் உலக மயமாக்கலின் ஒரு பெறுபேறாகும்.

உலக மயமாக்கல், பொருளாதாரத்தில் ஏற்படுத்தும் செல்வாக்கை மேலும் கலந்துரையாடினால் சர்வதேச நாடுகளின் எல்லைகள் சுதந்திரமாகத் திறந்து விடப்பட்டுள்ளதால் சுதந்திரமாக பிரயாணம் செய்யும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. 1977இன் பின்னர் இலங்கையின் ஊழியர்கள் மத்திய கிழக்கு நாடுகளை நோக்கி அதிகளவில் செல்லத் தொடங்கியமையை உதாரணமாகக் கூறலாம். வீட்டுப் பணிப்பெண்கள், ஜூகி தையல் இயந்திர இயக்குனர்கள், போன்ற துறைகளில் பெருந்தொகையானோர் வெளிநாடுகளில் வேலை வாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளனர். மேலும் புத்தி ஜீவிகள் வெளிநாட்டிக்கு இடம் பெயரும் போக்கையும் காணக்கூடியதாகவுள்ளது. பூகோள மயமாக்கல் காரணமாக இன்று கணணிப் பொறியியலாளார்கள், தரவு நிரற்படுத்துவோர்,

வைத்திய, பொறியியல் துறையைச் சேர்ந்தவர்களுக்கான வேலை வாய்ப்புக்கள் உலகம் பூராவும் விரிவடைந்துள்ளன. உலகின் அனைத்து கண்டங்களையும் நோக்கி குடிபெயரும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இப்போக்கு உலகின் பலநாடுகளிலும் காணப்படுகின்றது.

சர்வதேச வர்த்தகத்தில் பயன்படுத்துகின்ற நாணயங்களில் அமெரிக்க டொலர், யூரோ, ஸ்ரேலிங் பவுண், ஜப்பான்யென், ஆகியன இன்று சர்வதேச சந்தையில் முக்கிய பரிமாற்று நாணயங்களாக உள்ளன. சர்வதேச கொடுக்கல் வாங்கல்களின் போது பொது நாணய அலகை நோக்கி உலகம் வளர்ந்து கொண்டிருப்பதை இது காட்டுகின்றது. ஐரோப்பிய நாடுகள் யூரோ என்ற ஒரு நாணய அலகை எல்லா ஐரோப்பிய நாடுகளுக்கும் பொதுவான நாணயமாக ஏற்றுக்கொண்டு ஒரே பொருளாதார முறையின் கீழ் செயற்படத் தொடங்கியுள்ளன

உலக சந்தை விரிவடைந்ததைத் தொடர்ந்து நாடுகளுக்கிடையிலான இடைவெளிகள் குறுகியதையடுத்து நாடுகளிடையே வர்த்தக ஒப்பந்தங்கள், வலய அமைப்புக்கள் தோன்றியுள்ளன. ஐரோப்பிய பொருளாதார சமூகம், சப்டா ஒப்பந்தம், சார்க் அமைப்பு, ஆசியான், பிம்ஸ்டெக் அமைப்பு, அவற்றில் சிலவாகும். மேலும் சர்வதேச கொடுக்கல் வாங்கல்களின்போது உலக வர்த்தக அமையத்தின் தலையீடுகளும் நாடுகளில் செல்வாக்குச் செலுத்துகிறது. இவை காரணமாக நாடுகளிடையே வர்த்தக ரீதியான தடைகள் பெருமளவு நீங்கியுள்ளன.

சர்வதேச பொருளாதார அமையத்துடன் ஒன்றிணைந்து .இலங்கையும் 1977இன்பின் பொருளாதாரக் கொள்கைகளில் மாற்றத்தைக் கொண்டுவந்தது. இதன்மூலம் தனியார் துறையினரும் பல்தேசியக் கம்பனிகளும் இலங்கையில் முதலீடு செய்ய ஊக்கவிக்கப்பட்டதுடன் அதற்கான வசதிகளும் அரசாங்கத்தினால் வழங்கப்பட்டன. முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் அதன் ஒரு படி முறையாகும். உற்பத்தி துறையின் உலகமயமாக்கலாக இது இன்று எமது நாட்டில் செயல்படுகின்றது

கடந்த சில வருடங்களில் உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க மாற்றம் உற்பத்தி துறையில் ஏற்பட்ட உலக மயமாக்கலாகும். ஐக்கிய அமெரிக்கா, ஐரோப்பா, ஜப்பான், ஆகிய உலகின் பிரதான பொருளாதார வலயங்களில் பலதேசியக் கம்பனிகள் வெகுவாக அதிகரித்துள்ளன. இலாபத்தை உச்சப்படுத்திக் கொள்வதற்காக இவை நடவடிக்கை எடுத்து வருகின்றன. இதற்காக அவர்கள் பின்பற்றும் கொள்கைகள் சில வருமாறு

1. உற்பத்திக் கிரயத்தை இழிவளவில் வைத்திருத்தல்
2. விரைவில் மாற்றமுறும் சந்தைக்கு ஏற்றதாக உற்பத்தி செய்தல்
3. நவீன விஞ்ஞான தொழில் நுட்பத்தை பயன்படுத்தி ஆக்கரீதியாக உற்பத்தி செய்தல்

பல்தேசியக் கம்பனிகளுடன் தொடர்பான பிரிவுகள் ஒவ்வொரு நாட்டிலும் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் இவை காணப்படுகின்றன. அவர்களுக்கு நன்மை பயக்கும் வரிச்சலுகைகள் சுற்றாடற் கொள்கை, குறைந்த ஊதியம், என்ற நிலைமைகளை அவர்கள் தமக்குச் சாதகமாக ஆக்கிக்கொண்டுள்ளன. இதன்மூலம் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு மேலும் அபிவிருத்தியடையும் வாய்ப்புள்ளது.

2005இல் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி வேலைத்திட்டம் (UNDP) வெளியிட்ட அறிக்கைளின்படி 177 நாடுகளில் உயர் மானிட அபிவிருத்திக்குறி காட்டியை கொண்டிருக்கும் நாடுகள் 57 பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவற்றுள் முதற்பத்து நாடுகளும் பின்வருமாறு. இவை பூகோள மயமாக்கலின் கீழ் உயர் பெறுபேறுகளை அனுபவிக்கும் நாடுகளாகும்

1 நோர்வே
2. ஐஸ்லாந்து
3. அவுஸ்திரேலியா
4. லக்ஸம் பேர்க்
5. கனடா
6. சுவீடன்
7. சுவிட்சர்லாந்து
8. அயர்லாந்து
9. பெல்ஜியம்
10 ஐக்கிய அமெரிக்கா

இந்நாடுகள் அனைத்தும் அபிவிருத்தியடைந்த நாடுகளாக இனங் காணப்பட்டவைகளாகும். முதல் 20 நாடுகளை எடுத்து நோக்கின் 11வது இடத்தில் உள்ள ஜப்பான் ஓர் ஆசிய நாடாகும். நடுத்தர அபிவிருத்தி நாடாக இலங்கை 93ஆம் இடத்தைப் பெற்றுள்ளது. மானிட அபிவிருத்தி குறிகாட்டியின் அடிப்படையில் மிகக் குறைந்த மட்ட நாடுகள் 26 இனங் காணப்பட்டுள்ளன. அவற்றுள் 25 நாடுகள் ஆபிரிக்காவைச் சேர்ந்தவைகளாகும். இதிலிருந்து விளங்குவது யாதெனில் பூகோள மயமாக்கலின் நன்மைகள் இதுவரை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளைச் சென்றடையவில்லை என்பதாகும்.

பூகோள மயமாக்கத்தின் கீழ் இலங்கை அடைந்துள்ள நன்மைகள் சில

1. சர்வதேச சந்தையில் கைத்தொழில் துறை பிரவேசித்துள்ளதால் வெளிநாட்டுத் தொழில் நுட்பம் முதலீடு என்பன உள்வாங்கப்படுவதுடன் உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தவும் வேலையின்மைக்குத் தீர்வு காணவும் முடிந்துள்ளது.

2. உள்நாட்டு விவசாய உற்பத்திகளுக்கான சந்தைகளைத் தேடிக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதுடன் வெளிநாட்டுச் செலவாணி உழைப்பும் அதிகரித்துள்ளது.

3. வெளிநாடுகளுக்கான ஊழிய நிரம்பல் அதிகரித்துள்ளமையால் புத்தி ஜீவிகளுக்கும் புதிய தொழில் வாய்ப்புகள் கிடைத்துள்ளன.

4. உள்நாட்டுச் சந்தையில் நவீன தொழில் நுட்ப உபகரணங்கள், பொருட்கள், அதிகமாகக் கிடைப்பதனால் நுகர்வுக் கோலத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதுடன் சார்பளவில் விலைகளும் குறைந்துள்ளன.

5. வலய வர்த்தக ஒப்பந்தங்கள், அமைப்புகளில் கீழ் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள், சுங்கவரிச் சலுகைகள் காரணமாக பண்டங்கள் பரிமாற்றம் செய்வதற்கான வாய்ப்புகள் கிடைத்தமையால் வர்த்தகர்கள் நன்மையடைந்துள்ளார்கள்.

6. உள்நாட்டில் தொழில் நுட்ப உபகரணங்கள் தகவல் தொழில் நுட்பம் என்பனவற்றின் முன்னேற்றம் காரணமாக சர்வதேச உறவுகள் அதிகரித்துள்ளன. உலகம் மிகவும் நெருங்கியுள்ளது. புதிய கல்வி வாய்ப்புகள் இணையத்தினூடாக வீட்டிலிருந்தே கற்கக் கூடியதாக மாறியுள்ளன. இவற்றின் மூலம் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைந்து பண்புத்தரம் அதிகரித்தமை ஓர் விளைவாகும்.

உலக மயமாக்கல் காற்றைப்போல் உலகெங்கும் வீசுகின்றது. அனைவருக்கும் அதன் பெறுபேறு கிடைப்பதுடன் காற்றுப்போகும் திசையில் போக வேண்டிய நிலை அனைவருக்கும் ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு நாளும் எதிர்கொள்ளும் விரும்பத்தகாத நிலைமைகளை வெற்றிகொள்வது பற்றியும் உலகத் தலைவர்கள் கலந்துரையாடியுள்ளனர். ஒவ்வொரு நாடும் உலகத்துக்கு திறந்து விடப்பட்டுள்ளதால் உற்பத்தி வளப் பயன்பாடும் விரைவாக அதிகரித்துள்ளது. சுற்றாடலைப் பாதுகாப்பது தொடர்பாகக் கூடிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. மக்களின் அறியாமை காரணமாக எதிர்நோக்க வேண்டியுள்ள எச். ஐ. வி. எயிட்ஸ் போன்ற ஆபத்துக்கள் பற்றிய விழிப்பூட்டல்களும் உலக அமைப்புக்களால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**ஒப்படை 4.5**

உலகமயமாக்கல் மூலம் இலங்கையின் பொருளாதாரத்திலும் மக்கள் வாழ்க்கையிலும் ஏற்பட்டுள்ள செல்வாக்குகள் பற்றிய தகவல்களைச் சேகரிக்கவும்.